பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 349 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 17 சனிக்கிழமை (03.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



## இலங்கை விவகாரத்தில் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவோம்

### பிரித்தானியா தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கை விவகாரங்களிற்கு தீர்வைக் காண்பதற்காக இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதாகப் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் பிரபுக்கள் சபை இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்ந்துள்ளது.

இதன்போது பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு இலங்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளிற்கு பதிலளித்துள்ளார்.

இவர் இலங்கை விவகாரத்தில் இந்தியா ஆற்றி வரும் முக்கிய பங் 11

## அனுமதியில்லாவிட்டாலும் மின்கட்டணத்தை அதிகரிப்போம்

### மின்சார சபை அதிரடி

(கொழும்பு)
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் (PUCSL) 11

## பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசியல் சீர்திருத்தம் இலங்கையில் அவசியம்



### சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிர்வாகி சமந்தா பவர்

(கொழும்பு)
இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசியல் சீர்திருத்தங்களும் அவசியம் என சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் நிர்வாகி சமந்தா பவர் வலியுறுத்தியுள்ளார்.

சமந்தா பவர் நேற்று முன்தினம் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தபோதே இதனை வலியுறுத்தியதாக ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஜெசிகா ஜென்னிங்ஸ் தெரி 11

## உரும்பிராய் விளாத்தியடியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உரும்பிராய் விளாத்தியடி பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று நேற்று முற்றுகையிடப்பட்டது.

இதன்போது 4 இலட்சத்து 20 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவுடன் 36 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட் 11

## கிளிநொச்சி கந்தன்குளத்தில் 21 வயது இளைஞன் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கந்தன்குளத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மல்லாவி ஐயங்கன் குளத்தைச் சேர்ந்த பகிரதன் சுமன் என்ற 11

## சர்வதேசம் சமாதானத்தை விரும்பினால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்



### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்

(கொழும்பு)
சர்வதேசம் சமாதானத்தை விரும்பினால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய பிரத்தியேக பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித் 11

## கிளிநொச்சியில் அதிகரிக்கும் வழிப்பறிக்கொள்ளை

(கிளிநொச்சி)
கிளிநொச்சிப் பகுதியில் வழிப்பறிச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகப் பலரும் முறையிட்டு வருகின்றனர்.

ஆள்நடமாட்டம் குறைந்த இடங்களில் மூன்று நான்கு பேர் கூட்டாக நின்று வீதியால் செல்கின்றவர்களை இடைமறித்து அவர்களைத் தாக்கி அவர்களிடம் இருந்து பணம் மற்றும் பெறுமதிமிக்க கையடக்கத் தொலைபேசிகளைப் பறித்துச் செல்கின்ற சம்பவங்கள் அண்மைக் காலமாக 11

## வங்கிக் கணக்குகளில் காணாமல்போகும் பணம்

### பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)
பொதுமக்களின் வங்கிக் கணக்குளை ஹேக் செய்து பண மோசடியில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் வர்த்தகர் ஒருவரின் வங்கிக் கணக்கும் ஹேக் செய்யப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய வெளிநாட்டு பிரஜைகள் இருவர் உட்பட எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ள 11

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

(கொழும்பு)
2021 உயர்கல்வி பரீட்சை தொடர்பான பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியாகியுள்ளது என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. 11

## அரசு தேர்தலை பிற்போடுகின்றது தேர்தல் ஆணையாளர் சுயாதீனமற்றவர்

### ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கான சதிச் சூழ்நிலைகளை அரசாங்கம் ஏற்படுத்தி வருவதாக பாராளுமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 04 - 08 - 1959

இறப்பு 01 - 12 - 2022

## திருமதி பசுபதி புனிதவதி

தில்லையம்பதி வீதி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் அறிவொளி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பசுபதி புனிதவதி அவர்கள் நேற்று முன்தினம் (01.12.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.12.2022) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் தெற்கு விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(13651)

அறிவொளி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

# வெங்காயத்தின் விலை வீழ்ச்சி!

(கொழும்பு)

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இறக்குமதி செய்யப் பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 200 முதல் 300 ரூபா வாக இருந்த நிலையில், நேற்று 150 முதல் 170 ரூபா வரை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் ஒரு கிலோ உள்ளூர் சிவப்பு வெங்காயத்தின் மொத்த விலை நேற்று முன்தின விலையை விட நேற்று 340 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக அதிகரித் துள்ளது. (ம-7)


SINCE -1963

**சதாபொன்ஸ்**
கல்வி நிலையம்
மாலிசந்தி, அல்வாய்.

O/L மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் : 05.11.2022 திங்கட்கிழமை
காலை 7.30 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
077 309 5176, 021 226 3206,
077 925 0105

(C-5386)



**பௌதிகவியல் (Physics)**

2023, 2024 உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் (personal) குழுவாகவும் (Group) கற்பிக்கப்படும்.

- சகல அலகுகள்
- கடந்தகால வினாக்கள்

**076 157 0107**

(13650)



**தேவை**

தச்சு வேலை, கூரை வேலை தெரிந்தவர் உடன் தேவை.

(C-5403)

**077 436 6704**



**SB Travels and Tours pvt ltd**

தற்போது யாழ்ப்பாணம் - சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவை 12.12.2022 முதல் ஆரம்பம்
Colombo to chennai (இருவழி)
Indigo - 63,000/=
Srilankan airlines - 73,000/= விமான பயணச்சீட்டுக்களையும், Malaysiya, India, Bangkok, Dubai விசாக்களையும் பெற்றுத்தரப்படும்.

**SB Travels and Tours pvt ltd**
Hotline : 075 555 9932
No. 198, Kasthuriyar Road Jaffna - 021 222 8555, 076 691 1082, 83
No. 41, Ginthupitiya street Colombo - 13 - 011 233 3322, 076 691 1089
No. 324, Aluthmawatha road Colombo - 15 - 011 254 0280, 077 108 3481
Email : SBtravels99@yahoo.com

(C-5402)



**வேலையாட்கள் தேவை (பெண்கள்)**

நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு

- கணனி வடிவமைப்பாளர்
- விற்பனை உதவியாளர்

யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

(13658)

**077 469 6695**
**076 166 1986**


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.11.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

## அன்னலிங்கம் அருந்தவச்செல்வம்

(சிவா)

(13656)

அவர்களின் சிவப்பேறு அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 03.12.2022 சனிக்கிழமை அதிகாலை 6.00 மணிளயவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும். வீட்டுக் கிரியைகள் அதே தினம் மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

077 229 2449

குமுதெனி,
அல்வாய் வட மத்தி, அல்வாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

எம்முடன் உயிராய் 20 . 05 . 2003



இறைவனுடன் ஒளியாய் 14 . 12 . 2021

## அமரர் செல்வன் குகநேசன் சாரங்கன்

திதி : கார்த்திகை மாத பூர்வபக்க ஏகாதசி



ஓராண்டு சென்றதடா பழம்
உனது அம்மாவின் கண்களின்
மழை நீரோ வற்றவில்லையடா!
உனது நினைப்பிலே வாழ்நாள்
முழுவதும் உன்னை நினைத்து கடந்து
விட்டதடா சாரங்கா!
மீளாத் துயில் கொண்டு
ஓராண்டு கடந்தாலும் ஆறவில்லை எம் மனது
தீராத் துயரில் தவிக்கின்றோம்...
உன்தாய் உனை பாசமாய்
வளர்த்து பாராட்டி சீராட்ட பாதி வழியிலே
எம்மை பரிதவிக்க விட்டு விட்டுச் சென்றதேனோ?
குடும்பத்தின் ஆணிவேராய்
வழிகாட்டி வாழ வந்தாயடா. காலன் அவன்
உன்னை பாதியிலே அனுப்பிவிட்டானடா!
நீ நீறாகிப் போனாலும் உனது தாய்.
தந்தை. சகோதரர்கள் உனது வழிநடத்தலிலேயே
என்றென்றும் தொடர்ந்திடுவோம்.
ஆண்டுகள் பல கடந்தோடிப் போனாலும்
உனது புன்னகை பூத்த குழந்தை முகம்
எங்கள் நெஞ்சோடு வாழ்ந்திருக்கும்.

*உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சந்தையில் குறைவடைந்த எரிபொருள் விலை

(கொழும்பு)

**நாட்டில் எரிபொருள் விலைகளை 100 ரூபாவால் குறைக்க முடியும் என்று, இலங் கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணியாளர்கள் சங்க செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.**

உலக சந்தையில் எரிபொருள் விலை கணிசமாக குறைவடைந்துள்ளது.

நாட்டில் அமுலில் உள்ள எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைவாக, எரி பொருள் விலைகளை இந்த மாதம் முதலாம் திகதியுடன் 100 ரூபாவால் குறைத்திருக்க வேண்டும்.

ஆனால் அரசாங்கம் அவ்வாறு விலை குறைக்காமல் இருக்கிறது.

நாட்டுக்கு மசகு எண்ணெய் கொண்டு வரப்படாமல் நேரடியாக பெற்றோல், டீசல் போன்ற சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளே கொண்டுவரப்பட்டாலும், உலக சந்தை நிலவரத்துக்கு அமைய அவற்றின் விலைகளும் குறைந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (நி)

# மைத்திரியை ஜனாதிபதியாக்கியது தான் செய்த முட்டாள் செயல்

## என்கிறார் சந்திரிகா பண்டாரநாயக்க

(கொழும்பு)



"மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை தான் செய்த மிகப் பெரிய முட்டாள் தனமான செயல்" என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மகிந்த அமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் சந்திரிகா அம்மையாரைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரம் பற்றி கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நாசமாக்கி வருகின்றார். எனினும், அவருக்கு நான் உரிய நேரத்தில் தக்க பதிலடியை வழங்குவேன் என்று சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். (நி)

# புலமைப்பரிசில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆசான் பப்ளி கேசன் நிறுவனத்தினால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேற்றவுள்ள யாழ். மாவட்ட மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை இடம்பெறவுள்ளது என நிறுவனத்தின் முகாமையாளர் அறிவித்துள்ளார். (4-6)

# மீண்டும் உச்சத்தை தொடும் தங்கத்தின் விலை

(கொழும்பு)

உலக சந்தையில் தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய நிலவரப்படி, சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை 2 சதவீத உயர்வில் காணப்படுகின்றது.

அத்துடன், இந்தியா மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகளிலும் தங்கத்தின் விலை கடந்த சில நாட்களாக மீண்டும் அதிகரித்துச் செல்கின்றது.

இதேவேளை, சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை மேலும் உயரக்கூடும் என்று நிபுணர்கள் கணித்துள்ளதோடு, உள்ளூர் சந்தைகளில் ஆபரணத் தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது.

இலங்கையின் தங்க நிலவரத்தின் படி நேற்று முன்தினம் 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 182,300 ரூபாவாக பதிவாகியிருந்தது. அத்தோடு, 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 167,150 ரூபாவாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் இலங்கையில் தங்கத்தின் விலை வரலாறு காணாத உயர்வை எட்டி இரண்டு இலட்சம் ரூபா வரை சென்றிருந்த நிலையில் மீண்டும் விலை உயர்ந்து வருகின்றது. (நி)

---

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கெதிரான அனைத்து வன்முறைகளையும் தடுப்பதற்கு இன்றே உறுதி பூணுவோம்!. தனிமனித மாற்றமே சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும்!!"

யாழ் சமூக செயற்பாட்டு மையம் (C-5323) Jaffna Social Action Center (JSAC)

---

## Dr.M.Ganesaratnam Memorial Lecture

### "Surgery Beyond the Scalpel"

by

**Dr.Satish Kumar Goonesinghe**
**MBBS(Col),LLB(OUSL),MS(Col), MA(Kel), FRCS(Edin), FCSSL**
**President, The College of Surgeons of Sri Lanka and Consultant Urological Surgeon**

on
Monday, 05th December 2022 at 3.00 p.m

at
Hoover Auditorium,
Faculty of Medicine,
University of Jaffna.

All are cordially invited.

**Registrar,**
**University of Jaffna.**
**Sri Lanka.**

(C-5395) **03.12.2022**

---

## UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

**Provision of a Private Security Service for the University of Jaffna -2023/2024**

1. The Chairman, Department Procurement Committee of University of Jaffna invites sealed Bids from eligible and qualified bidder for Provision of a Private Security Service for the University of Jaffna.
2. Period of contract shall be a calendar year days subject to a performance evaluation period of 90 Days from the Start date
3. Companies/ Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   - 3.1 To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have its registered office or sub office in Northern Province (closer to main premises) and shall possess the valid registration in the Ministry of Defence, Public Security, Law and Order, Business registration and a copy of the valid registration certificate in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance should be attached with the Bid.
   - 3.2 Average of annual volume of security service contracts performed in the last 3 years should be at least **Rs. 75 Million**
   - 3.3 Must have satisfactorily carried out at least one Security service contract to a Government Department/ Corporation/University during the last 3 years for not less than **Rs. 25.0 Million.**
4. The Company/ Firm must have satisfactorily carried out at least two security service contracts which included a minimum work force of **175 security staff** in each contract for any Government Department/ Corporation/ University or Institutions over the last three years. Certified copies of letters issued by such clients should be attached with the Bid.
5. Interested Bidders may inspect the Bidding documents and obtain further information from the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m to 2.30 p.m on any working day.
6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m to 2.30 p.m on any working day up to **22nd December 2022** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. **5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **University of Jaffna Branch People's Bank Account Number 970000060000276** at any Branch of People's Bank.
7. Duly completed sealed Bids shall be sent either by registered post to Chairman, Department Procurement Committee, University of Jaffna or deposited in the Tender Box maintained at Registrar's office on or before 2.00 p.m **on 27th December 2022.** Late Bids or incomplete Bids will be rejected.
8. Bids will be opened soon after closing time in the presence of the Bidders or their representatives who choose to attend.
9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Four hundred thousand only (**Rs. 400,000.00**).
10. Pre-bid meeting will be held at **10.00 am on 16th December 2022** in the board room of the University of Jaffna, Thirunelvely.

**The Chairman/ Department Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna.**

(C-5393) **03.12.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்

# யாழ்.ஜொனியன்ஸ் அணி 5 ஆவது போட்டியில் வெற்றி




மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் 3 ஆவது தடவையாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ண போட்டியின் 5 ஆவது போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி, கிறாஸ் கொப்பர்ஸ் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று கால் இறுதி முன்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 19.5. ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. கோகுலன்-26, டிலோஸன்-11, ஜனன்தன்-19, சஜீவன்-21 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பிருந்தா-19 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் அபிநாஸ்-28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் டினேஸன் 10 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் சன்சயன் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கானாமிர்தன்-15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

105 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 15 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

அன்புஜன்-25, டினேஸன்-3, சௌமீகன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் சார்பாக ஜனன்தன் 10 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் மதுஸன், அஜித், சுஜீவன் தலா 13,36,21 ஓட்டங்களுக்கு தலா 1 விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் யாழ்.ஜொனியன்ஸ் அணியை சார்ந்த டினேஸன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு யாழ்.ஜொனியன்ஸ் அணி 4.35 புள்ளிகளையும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி 1.54 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (4)

## நல்லூர் பிரதேச சபை
## சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல் - 2023, 2024

நல்லூர் பிரதேச சபையினது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான சட்ட விடயங்களை பிரதேச சபையினது சார்பில் கையாளுவதற்கும், சபைக்கு அவ்வப்போது தேவைப்படும் சட்ட ஆலோசனைகளினை எழுத்துமூலம் வழங்குவதன் பொருட்டும் சபையினால், நல்லூர் மற்றும் கொக்குவில் ஆகிய உப அலுவலக ரீதியாக இரண்டு (02) சட்ட ஆலோசகர்களை நியமித்து அவர்களிடமிருந்து சட்ட ஆலோசனைச் சேவையினைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இதற்குப் பொருத்தமான சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் :**

- யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அலுவலக வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். சபையின் அலுவலக சட்டவிடயங்கள் தொடர்பில் தேவைப்படும் பட்சத்தில் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்து உரிய ஆலோசனைகள் வழங்குதல் வேண்டும்.
- குறைந்தது 02 வருடங்கள் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசு ஆகவும் பணியாற்றியிருத்தல் வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஆலோசனை விடயத்தில் முன்அனுபவம் முன்னுரிமையாக கொள்ளப்படும்.
- சேவை வழங்கப்பட வேண்டிய காலப்பகுதி : 2023.01.01 முதல் 2024.12.31 வரையான இரண்டு வருடங்கள்.

விண்ணப்பங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் இச்சேவையினை வழங்க விரும்பினால் அதற்கான படிவக்கட்டணம் 1,000.00 இனை தலைமை அலுவலகத்தில் செலுத்தி அதற்கான விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி தேவைப்படும் ஆவணங்களின் நகல் பிரதியினை இணைப்பதுடன், உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சகல சட்ட ஆலோசனை விடயங்களிற்கான கொடுப்பனவு விபரத்தினையும் இணைத்து 2022.12.16 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்பாகவோ கடித உறையின் இடது பக்க மூலையில் "சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் "தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு **021 222 2700** தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பத்மநாதன் மயூரன்**
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

(C-5401) 2022.12.03

## கேள்வி அறிவித்தல்-நல்லூர் பிரதேச சபை
### சபைநிதி/அபிவிருத்தி ஒதுக்க வேலைத்திட்டம் -2022 (கட்டம் IV)

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் வடிகால் வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11)ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்'** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222 2700, 021-314 2841) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர்,பெறுகைக்குழு,நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் 2022.12.05 ஆம் திகதியிலிருந்து 2022.12.23 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 15.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2022.12.26** ம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2022.12.16** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் **மு.ப 10.30** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | தொடர்பு இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/CF-IV/2022/ 01 | பழைய தபால்கந்தோர் வீதியில் வடிகால் அமைத்தல் | 7.79 | 90 நாட்கள் | C7 / C6 | 72 நாட்கள் | 156,000.00 | 2023.04.05 |
| 2. | NPS/CF-IV/2022/ 02 | பழைய தபால்கந்தோர் வீதி புனரமைத்தல் | 5.03 | 90 நாட்கள் | C7 / C6 | 72 நாட்கள் | 100,000.00 | 2023.04.05 |
| 3. | NPS/CF-IV/2022/ 03 | அரியாலை பெரியதோட்டம் 7ம் ஒழுங்கையில் கொங்கிறீட் வடிகால் அமைத்தல் 0.0m தொடக்கம் 120.0m வரை (பொதி இல 01) | 8.68 | 90 நாட்கள் | C7 / C6 | 72 நாட்கள் | 173,000.00 | 2023.04.05 |
| 4. | NPS/CF-IV/2022/ 04 | அரியாலை பெரியதோட்டம் 7ம் ஒழுங்கையில் கொங்கிறீட் வடிகால் அமைத்தல் 120.0m தொடக்கம் 240.0m வரை (பொதி இல 02) | 8.39 | 90 நாட்கள் | C7 / C6 | 72 நாட்கள் | 168,000.00 | 2023.04.05 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(சி-5400) 2022.12.03

## விற்பனைக்கு

**TVS→ Scooty pept (BBG)**
**Scooty → Ranamoto Pattaya (BEF)**
**Honda LA Custom (250)**
**Honda md 90 (Un registered)**

**077 887 5037**

(13657)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்றம்

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்தின் ஆதனவரி வட்டாரம் 14 இல் அரசடி வீதியில் 22ம் இலக்க ஆதனத்திற்கு அருகில் காணப்படும் ஆதனமானது புதிய பெயரோ, புதிய ஆதன இலக்கமோ காணப்படாமல் உள்ளதுடன் ஆதனவரி பதிவேட்டிலும் குறித்த ஆதனம் பதியப்படவில்லை.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு செல்வி. ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 929 ஆம் இலக்க 04.11.2003 ஆம் திகதிய அறுதி உறுதியின்படி நிலப்பரப்பு 00 குளி14.10 இற்கு திரு.இரத்தினம் சிவகுமார் என்பவர் சொந்தக்காரர் ஆகின்றார்.

மேற்குறித்த உறுதியின் தாயுறுதி பிரசித்த நொத்தாரிசு கந்தையா அரியநாகயம் அவர்களினால் 1282 ஆம் இலக்கத்தில் 21.10.1992 இல் நிறைவேற்றப்பட்டுள்ளது. குறித்த உறுதியின் வகை வெளிப்படுத்தல் சாதனமாகக் காணப்பட்ட போதும் நன்கொடை என குறிக்கப் பட்டிருப்பதும் அதற்கான தாயுறுதி ஏதும் இல்லாததும் அவதானிக் கப்பட்டுள்ளது.

எனவே பெயர் மாற்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் தாய் உறுதியாக பிரசித்த நொத்தாரிசு கந்தையா அரியநாயகம் அவர்களினால் வரையப்பட்ட உறுதியானது வெளிப்படுத்தல் உறுதியாகும்.

**ஆதனடாப்பு விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்.பகுதி நல்லூர் கோவில்பற்று கோண்டாவில் இறை "தட்டு" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் தெ.தங்கராசா அவர்களினால் 12486 ஆம் இலக்கத்தில் 26.01.2022 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் படியும், நிலப்பரப்பு 00 குளி 14.10 இதன் எல்லைகள். **கிழக்கு** சுந்தரம் இரத்தினசபாபதி எனவும் **வடக்கு** வயிரவன் செல்வன் எனவும் **மேற்கு** ஆஸ்பத்திரி வீதி எனவும் **தெற்கு** இராசலிங்கத்தின் ஆதனம் எனக் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்தை பெயர் மாற்ற விண்ணப்பதாரியான இரத்தினம் சிவகுமார் என்பவருக்கு ஆதன பெயர் மாற்றம் மேற்கொண்டு ஆதன பதிவேட்டில் அவரது பெயரை வெளிப்படைத் தன்மையாக உட்புகுத்த வேண்டிய பொறுப்பாளர் என்ற வகையில் இவ் விபரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றது. இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஏதும் ஆட்சேபனைகள் காணப்படின் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட திகதியில் இருந்து ஒரு மாத காலத்துக்குள் சட்டரீதியான ஆவணங்களுடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கௌரவ தவிசாளர், நல்லூர் பிரதேச சபை என்ற முகவரிக்கு தங்கள் ஆட்சேபனைகளை தெரியப்படுத்தலாம். சட்டரீதியான ஆவணங்கள் இல்லாத ஆட்சே பனைகளை நிராகரிப்பதற்கு நல்லூர் பிரதேச சபைக்கு அதிகாரம் உள்ளது என்பதை தெரியப்படுத்துவதுடன் குறித்த காலப்பகுதிக்குள் சட்டரீதியான ஆட்சேபனைகள் எவையும் கிடைக்கப்பெறாத பட்சத்தில் குறித்த ஆதனம் திரு.இரத்தினம் சிவகுமார் என்பவரது பெயரில் சோலைவரிப் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் என்பதனையும் அறியத்தருவதுடன் இதனால் எதிர்காலத்தில் ஏற்படுகின்ற எந்தவித பிணக்குகளையும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ப.மயூரன்,**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

(c-5394)

## மாந்தை கிழக்கு பிரதேச சபை 2023 ஆம் ஆண்டுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல்

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பொன்னகர், பாண்டியன்குளம், பாலிநகர், நட்டாங்கண்டல் சந்தைகள் அடுத்த வருடம் 01.01.2023 முதல் 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு குத்தகை வழங்குவதற்கான கேள்விகள் கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் - 05.12.2022 - 18.12.2022 வரை (அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 3.30 மணி வரை)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 19.12.2022 பி.ப 12.00 மணிவரை

கேள்வி திறக்கப்படும் திகதி :- 19.12.2022 பி.ப 1.00

கேள்வி திறக்கப்படும் இடம் - மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்

கேள்விப்பத்திரங்களை மாந்தை கிழக்கு பிரதேச சபையில் பெற்றுக்கொள்ள முடியும். பெறப்படும் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியினை தவிசாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் என முகவரியிட்டு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும். இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகைக்கான சந்தைகள் | சந்தை வகை | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | மீளளிக்க முடியாத வைப்புத்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | பாண்டியன்குளம் | மரக்கறிச் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 02 | பாண்டியன்குளம் | மீன் சந்தை | 4000.00 | 1500.00 | 1000.00 |
| 03 | பாண்டியன்குளம் | கோழி இறைச்சிக் கடை | 4000.00 | 1500.00 | 1000.00 |
| 04 | நட்டாங்கண்டல் | மரக்கறிச் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 05 | நட்டாங்கண்டல் | மீன் சந்தை | 4000.00 | 1500.00 | 1000.00 |
| 06 | நட்டாங்கண்டல் | கோழி இறைச்சிக் கடை | 4000.00 | 1500.00 | 1000.00 |
| 07 | பொன்னகர் | மரக்கறிச் சந்தை | 3000.00 | 1500.00 | 1000.00 |
| 08 | பொன்னகர் | மீன் சந்தை | 3000.00 | 1500.00 | 1000.00 |
| 09 | பொன்னகர் | கோழி இறைச்சிக் கடை | 3000.00 | 1500.00 | 1000.00 |
| 10 | பாலிநகர் | மரக்கறிச் சந்தை | 15000.00 | 1500.00 | 1000.00 |
| 11 | பாலிநகர் | மீன் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 12 | பாலிநகர் | கோழி இறைச்சிக் கடை | 6000.00 | 1500.00 | 1000.00 |
| 13 | பாலிநகர் | வாராந்த சந்தை | 2000.00 | 1500.00 | 1000.00 |

நிபந்தனைகள்

- பாலிநகர் வாராந்தச் சந்தையில் சகலவிதமான அனுமதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.
- இலங்கைப் பிரஜையாகவும், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- உள்ளூராட்சி மன்றத்தினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்வி கோர தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
- ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
- வியாபார உத்தரவுக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
- சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
- சித்தியடையும் கேள்விதாரர்கள் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**ம.தயானந்தன்,**
**தவிசாளர்**
**பிரதேச சபை,**
**மாந்தை கிழக்கு.**

(c-5396)

## தேர்தலுக்கு அஞ்சும் பெரமுன

### -சம்பிக்க தெரிவிப்பு-

(கொழும்பு)

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அதே மக்கள் ஆணை தற்போது இல்லை. அதனால்தான் தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சுகின்றது" என 43 ஆம் படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

"ராஜபக்ஷக்களின் "மொட்டு"க் கட்சிக்குக் கடந்த தேர்தல்களில் வழங்கப்பட்ட மக்கள் ஆணை இப்போதும் இருக்கின்றதா?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


"மக்களின் தற்போதைய நிலைப்பாட்டை அறிவதற்கு தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும்.

2018 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தியபோதுதான் தெரிந்தது மக்கள் இருப்பது "மொட்டு"வின் பக்கம் என்று.

அதேபோல், அடுத்த உள்ளூராட்சி சபைத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் ஆணை யாருக்கு என்பதை அனைவரும் அறிய முடியும்.

எனினும், கடந்த முறை போல் இம்முறையும் மக்கள் ஆணை கிடைக்காது என்ற அச்சத்தில்தான் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயங்குகின்றது" என அவர் தெரிவித்தார். (நி)

## கால்வாய் அமைக்கப்படாததால் வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளம்



(கரணவாய்)

தற்பொழுது பெய்து வரும் மழையினால் நெல்லியடிக்கு அண்மித்த வீதியில் கால்வாய் அமைக்கப்படாததனால் மழை நீர் ஓட முடியாமல் வீதியில் தேங்கி நிற்கிறது.

இதனால் போக்குவரத்து செய்யும்பொதுமக்கள் சிரமத்துக்கு உள்ளாகின்றார்கள். வீதி அதிகார சபைக்கு பல தடவைகள் முறையிட்டும் கால்வாய் அமைப்பதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. இவ் வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் விபத்துக்கு உள்ளாகும் நிலை காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# பொட்டாசியம் குறைபாட்டால் நெற் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காலபோக நெற் பயிர்ச்செய்கையில் பயிர்களில் பொட்டாசியம் பற்றாக்குறையால் நுனி கருகும் நிலை ஏற்பட்டுள்ளதாக வடமாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி தெரிவித்தார்.

சாவகச்சேரி, கைதடி, நவாலி, கோப்பாய், கரவெட்டி, சண்டிலிப்பாய், காரைநகர் போன்ற பல பிரதேசங்களிலும் நெற் பயிர்களில் பொட்டாசியக் குறைபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

இக் குறைபாட்டின் ஆரம்ப அறிகுறியாக முதிர்ச்சி அடைந்த இலைகள் கடும் மஞ்சள் நிறமாவதோடு பொட்டாசிய பற்றாக்குறை அதிகமாகும்போது இலைகள் நுனியில் இருந்து அடிவரை செம் மஞ்சள் நிறத்திலிருந்து மஞ்சள், கபில நிறமாக மாறும்.

விவசாயிகள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் நெற் செய்கையில் போஷனை முகாமைத்துவத்தை அதிகரிக்க முடியும்.

பொட்டாசியம் அடங்கிய இரசாயனப் பசளைகளை சிபாரிசுக்கு அமைய இடல், பொட்டாசியம் அடங்கிய திரவ பசளையினை சிபாரிசுக்கமைய விசிறல், மேலும் வைக்கோலில் அதிகளவு பொட்டாசியம் காணப்படுவதனால் அடுத்த போகத்தில் வைக்கோலினை இட்டு உழவு செய்தல், நெல் அடிக்கட்டைகளை (ஒட்டுக்கள்) அறுவடையின் பின்னர் உழுது விடல், கிளிசிரியா இலைகளை வயலில் தூவிவிடல் வேண்டும்.

இதன் மூலம் நைதரசன் மற்றும் பொட்டாசியம் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

# அட்டை பண்ணைக்கு எதிராக அனலைதீவில் போராட்டம்



(அராலி)

அனலைதீவு துறைமுகத்தில் அட்டைப் பண்ணைக்கு எதிராக நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அனலைதீவு கடற்றொழிலாளர்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

அட்டைப் பண்ணையால் மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மீன்களின் இனப்பெருக்கத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது. பல தடவைகள் பல தரப்பினருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியும் உரியவர்கள் மீனவர்களது நிலையை கருத்தில் கொண்டு தீர்வு வழங்கவில்லை.

மீனவர்களது நிலையை கருத்தில் கொண்டு தீர்வு வழங்குமாறு கோரி இந்த போராட்டத்தை முன்னெடுக்கிறோம் என தெரிவித்தனர். (4-6-104-33)

# கிருஷ்ணபுரம், மலையாளபுரம் கிராமங்களுக்கான பேருந்து சேவை நேற்று ஆரம்பம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கிருஷ்ணபுரம், மலையாளபுரம் உள்ளிட்ட கிராமங்களுக்கான போக்குவரத்து சேவை இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலையினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வந்த கிளிநொச்சி மாவட்டத்துக்கான பெண் நோயியல் மார்பக சிகிச்சை நிலையத்தினை அண்மையில் கிருஷ்ணபுரத்தில் அமைந்துள்ள தொற்று நோயியல் மருத்துவமனை வளாகத்திற்கு மாற்றி இருந்த போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந. சரவணபவன் கிருஷ்ணபுரம், மலையாள கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இலங்கை போக்குவரத்து சபைக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி இருந்ததோடு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் குறித்த கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். இந்த நிலையில் கிளிநொச்சி கிருஷ்ணபுரம், மலையாளபுரம் போன்ற கிராமங்களுக்கான போக்குவரத்து சேவைகள் நேற்று மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (4-6-315-316)

# மாந்தை கிழக்கு பிரதேச சபை 2023ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

மாந்தை கிழக்கு பிரதேச சபை 2023 ஆண்டுக்கான கீழ்குறிப்பிடப்பட்ட வழங்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 05.12.2022 தொடக்கம் 18.12.2022 வரை விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பப் படிவக்கட்டணம் ரூபா 100.00ம் விண்ணப்பப் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00ம் செலுத்த வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 19.12.2022 ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள் - தொகுதி A பொருட்கள் வழங்குதல் (பொது)**

**தொகுதி B சேவை / வேலை**

| தொ.இல | பொருட்கள் வழங்குதல் |
|---|---|
| 01 | காகிதாகிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம், இரும்பு) |
| 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| 04 | யன்னல், திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணி வகைகள் |
| 05 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ட் மற்றும் காட்வெயார் பொருட்கள் |
| 06 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள் விம், ஹாபிக் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| 11 | தோல் உற்பத்திப்பொருட்கள், கம் சப்பாத்துக்கள் |
| 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| 14 | இரும்புப் பொருட்கள் |
| 15 | கற்கள், மண் வகைகள் |
| 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| 17 | அலங்காரப் பொருட்கள் |
| 18 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப் பொருட்கள் |
| 19 | உணவு, சிற்றுண்டி வகை |

| தொ.இல | சேவைகள் / வேலைகள் விபரம் |
|---|---|
| 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் |
| 02 | தளபாடங்கள் திருத்தம் |
| 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல், காற்று குளிராக்கி, தொலைநகல், நிழற்படப் பிரதி இயந்திரம், கணனி, கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் |
| 04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மின் முறுக்கலும் |
| 05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள் ஏனையவை |
| 06 | கட்டட அமைப்பும் திருத்த வேலைகளும் |
| 07 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| 08 | இறப்பர் முத்திரைகள் தயாரித்து வழங்குதல் |
| 09 | சகலவித வாகனத்திருத்தமும் மின்சார வேலை வாகன உட்பாகம் சீற் என்பவற்றுக்கான குசன் வேலை |
| 10 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| 11 | வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

**நிபந்தனைகள்**

01. வழங்கல்கள்/சேவைகள் 2023 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகளை நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
03. பதிவிற்காய் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
04. ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளுக்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான படிவங்களில் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.
05. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ம.தயானந்தன்,**
**தவிசாளர், பிரதேச சபை,**
**மாந்தை கிழக்கு.**

(c-5397)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலையார்வனின் 22 ஆவது வெளியீடான "குருநகர் மான்மியம்" நூல் எதிர்வரும் புதன்கிழமை மாலை 4 மணியளவில் பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இளைஞர் கலைக்கழகத்தின் தலைமையில் வெளியிடப்படவுள்ளது. (4)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேலணை வடக்கு, சரவணை கிழக்கு பாலையம்பதி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கர்மாரம்பம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கும் எண்ணெய்க்காப்பு எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8 மணிமுதல் 4 மணிவரையும் மஹாகும்பாபிஷேகம் மறுநாள் காலை 7.29 முதல் 8.41 வரை இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளிகளின் அபிமானத்தையும் உரிமைகளையும் வலுவூட்டலையும் பாதுகாத்திடுவோம்

மாற்றுத்திறனாளிகளை உலக ரீதியாக நினைவுகூரும் நாளில் அவர்கள் இந்த உலகில், நாட்டில், சமுதாயத்தில் சம அந்தஸ்தோடு வாழ்வதற்கு அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இன்றைய நாள் நினைவு கூர்ந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் ஓர் விழிப்புணர்வாக கொண்டாடப்படுகின்றது.

சமூக அடிப்படையிலான மாற்றுத்திறனாளிகளின் புனர்வாழ்வு என்பது மாற்றுத்திறனாளிகள் வாழும் சமூகத்தில் அவர்களுக்கான புனர்வாழ்வுச் சேவைகளைக் கொண்டிருத்தல் தொடர்பான ஒரு செயன் முறையாகும். இது பிரதானமாக சமூகத்தின் அனைத்து உறுப்பினர் களையும் உள்ளடக்கியதாக செயற் படுகின்றது. இலங்கையில் புனர் வாழ்வு எனும் அடிப்படை எண்ணத்தோடு சமூக அபிவிருத்தி எனும் பாதை நோக்கிச் செல்கின்றது.

அதிகமான CBR திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை இனம் கண்டு அதற்கேற்றவாறு மருத்துவ புனர்வாழ்வு, கல்வி, தொழில் சார்ந்த புனர் வாழ்வு, சமூகப்புனர் வாழ்வு மற்றும் விழிப்புணர்வுகளை உருவாக்குதல் மற்றும் ஊனமுற்ற தன்மையைத் தடுத்தல் என்பனவாகும். நிலையம் சார் புனர்வாழ்வை விடுத்து சமூகம் சார் புனர்வாழ்வு செய்யும். அவர்களுக்கு கொடுக்கப்படும் புனர்வாழ்வின் தராதரம் மற்றும் மட்டுப்படுத்தல்கள் என்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

சமூகம் சார் புனர்வாழ்வுப் பணியாளர்களின் பொறுப்பு மாற்றுத்திற னாளி நபர்களின் உடல், உள், சமூக அபிவிருத்திக்காக சில செயற்பாடுகளைச் செயற்படுத்துவது இவற்றின் கடமையாகும். CRW என்பது ஒரு மாற்றுத்திறனாளி நபருக்கு அவரது குடும்பத்திற்கும் அவர்



வாழ்கின்ற சமுதாயத்திற்கும் தன்னாலான பங்களிப்பைச் செய்கின்றார்கள். CRW இன் செயற்பாடுகளாவன,

நபரின் நிலைமை, ஆற்றல் மற்றும் பலவீனம் பற்றிய அடிப்படை பகுப்பாய்வு செய்தல், மாற்றுத்திறனாளிகளின் குடும்பம் பெற்றுக்கொள்ள வேண்டிய பயிற்சி பற்றி தகவல் கொடுத்தல், அவசியமானால் மாவட்ட மட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பற்றி தெரியப்படுத்தல், மாற்றுத்திறனாளிகள் பெற்றுக்கொள்ளும் பயிற்சி அவரில் காணப்படும் முன்னேற்றம் பற்றி பதிவேடுகளை வைத்திருத்தலும் பாதுகாத்தலும், குறிப்பிட்ட இயலாமைக்கான காரணமும் அதனை தடுக்கும் முறையையும் சமூகத்திற்கு தெரிவித்தல் போன்றன ஆகும்.

### இயன் மருத்துவம் (Physic therapy)

முன்னேற்றம் வரக்கூடிய நபர்களுக்கு நாளாந்தம் செய்யக்கூடிய சில பயிற்சிகளை கொடுத்து நிரந்தரமாகவே மாற்றுத்திறனாளிகளை நாளாந்தம் செய்யக்கூடிய சில பயிற்சிகள் அடிப்படையான பயிற்சிகளையும் கொடுத்தல் வேண்டும். அதற்கு தகுதியான விதமாக பயிற்றப்பட வேண்டும்.

### தொழில்சார் பயிற்சி (Occupational therapy)

மாற்றுத்திறனாளிகள் நாளாந்தம் செய்ய வேண்டிய செயல்களுக்குப் பயிற்சி கொடுத்து ஊக்குவித்தல். உதாரணமாக உணவு உண்ணுதல், உடை அணிதல், நாளாந்த வீட்டு வேலைகளில் ஈடுபடுதல்.

### பேச்சுப் பயிற்சி (Speech therapy)

திக்குவாய் உள்ளவர்களுக்கும் பேசும் தன்மை குறைந்தவர்களுக்கும் கொடுக்கக்கூடிய பயிற்சி. காது கேட்காதவர்களுக்கு பேசப்படிப்பதற்கு விசேட பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். இக்கற்பித்தலை விசேட பாடசாலை அல்லது CBR இல் கற்றுக் கொடுக்கலாம்.

### மாற்றாற்றல் உள்ளோர் என்றால் யார்?

நீங்கள் வாழும் சமுதாயத்தில் புரிந்து கொள்ளும் சக்தியற்றவர்கள், காது கேளாதவர்கள், பேச முடியாதவர்கள், கண் தெரியாதவர்கள், கைகால் அசைத்து நடமாட முடியாதவர்கள், சமுதாயத்தில் மற்றவர்கள் போல சரிசமமாக செயற்பட முடியாதவர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். இருந்தும் இவர்களில் பலர் பல்வேறு ஆற்றல்களைக் கொண்டிருப்பர். இப்படியானோரே மாற்றாற்றல் உள்ளோர் எனப்படுவர். எல்லாச் சமுதாயத்திலும் மாற்றாற்றல் உள்ளோர் அநேகமானோர் உள்ளனர். சமுதாயத்தில் உள்ள குடி சனத்தில் 100 பேர்களுள் 8 அல்லது 9 பேர் மாற்றுத்திறனாளிகள் ஆவர்.

### ஊனமுற்ற தன்மை என்றால் என்ன?

- இழப்பு அல்லது பாதிப்பு (Impairment)- ஒருவரின் சுக நிலையைப் பொறுத்தமட்டில் உளவியல் அல்லது மனதளவில் அல்லது செயலளவில் அவரின் சாதாரண நிலையில் ஏற்படும் குறை அல்லது சரி இல்லாத நிலை இழப்பு அல்லது பாதிப்பு என்கின்றோம். (மருத்துவ உதவி செய்யக்கூடியது, சில குணப்படுத்தக்கூடியது).
- திறன் குறை (Disability)- இழப்பின் காரணமாக பாதிக்கப்பட்ட மனிதன் தனது வயது மற்றும் பாலினத்திற்கேற்ப நாளாந்தம் செய்ய வேண்டியவற்றை மற்றவர்கள் போல் செய்ய முடியாத தன்மையாகவும் இருக்கும். சேவைகள் திட்டமிடல், நாளாந்த பயிற்சியளித்தல், கல்வி ஊக்கப்படுத்தல், ஆற்றல்களை வலுவூட்டல், வருமானம் தரக்கூடிய சுய அபிவிருத்தி திட்டங்களைச் செயற்படுத்தல் போன்றன மேற்கொள்ளலாம்.
- இயலாமை (Handicap)-தன்னுடைய காரியங்களைத்தானே செய்யவோ, முன்னேறவோ முடியாத வலுவிழந்த நிலை. குடும்ப அங்கத்தினர், சமூகம், சமூகப்பணியாளர்கள் இவர்களுக் குரிய புனர்வாழ்வை மேற்கொள்ளலாம். எனவே இழப்புதிறன் குறை யால் பாதிக்கப்பட்ட அனைவரும் மாற்றுத்திறனாளிகள் அல்ல.

ஆக்கம்
எஸ்.கிருபாகரன்

# திரிபோஷா உற்பத்தியை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

மக்காச்சோளம் இருப்புக்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் திரிபோஷா உற்பத்தியை மீள ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு ஏறக்குறைய 60,000 திரிபோஷா பொதிகளை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகம் செய்வதோடு தாய்மார்களுக்கான திரிபோஷா உற்பத்தியை தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் இறக்கு மதி செய்யப்படும் வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 200 முதல் 300 ரூபாவாக இருந்த நிலையில், இன்று 150 முதல் 170 ரூபாய் வரை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)



# இராசிபலன்

03.12.2022
கார்த்திகை 17, சனிக்கிழமை
தசமி முற்பகல் 9.06 மணிவரை

உத்திரட்டாதி முற்பகல் 9.23 மணிவரை
சுபநேரம் -3.15-4.45 மணிவரை
இராகுகாலம் -9.15-10.45 மணிவரை

சந்திராஷ்டமம்
பூரம்

வளவன்



மேஷம்

தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.



கடகம்

புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலம் சீராகும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.



துலாம்

செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், உற்சாகமான நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.



மகரம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.



ரிஷபம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



சிம்மம்

வார்த்தையில் நிதானம் தேவை, குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை பாதியில் விட்டு விடுவீர்கள், பிரயாண பயமுண்டு.



விருச்சிகம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், முன்னேற்றம் கூடும் நாள்.



கும்பம்

ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வாய்ப்புகள் உங்களை நாடிவரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.



மிதுனம்

வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்வீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



கன்னி

தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.



தனுசு

திட்டமிட்ட காரியத்தைச் செய்து முடிப்பீர்கள், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.



மீனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லபடியாக அமையலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

உலகமே முழ்கினும் நல்லதைச் சரியாகச் செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல் - 2023
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01. | ஆதனவரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2023 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம். உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2023ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியில் 10% கழிவினைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்தத்தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2023 ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். |
| 02. | ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர் மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர் மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03. | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச. தனியார் நிறுவனங்கள் | 1.தாங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள். மதில்கள். முட்கம்பித்தூண் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள். மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்.<br>2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒருவருடகாலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும்.<br>3.அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரியகட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்..<br>5. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்கான தண்டப்பணம் 1597/8 ஆம் இலக்க 2009.04.17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகை பகுதி I தொகுதி (I) பொது அட்டவணை V இன் மேவுதல் அங்கீகாரங்கள் பிரகாரம் அறவீடு செய்யப்படும். |
| | | | பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் அமைத்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. |
| 04. | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 05. | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2022 ஆம் அண்டு தை மாதம் 27 ஆம் திகதி 2264/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "ஈ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். |
| 06. | வியாபார அனுமதிப்பத்திரம் 2023 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில். சுன்னாகம். ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2023 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07. | துவிச்சக்கரவண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2023.03.31 ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2023 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08. | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2023.03.31 ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி பதிவு செய்து 2023 ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 09. | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள். நிறுவனங்கள். வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டண விபரம் பின்வருமாறு. |

| தொ. இல | விபரம் | கட்டணம் (1சதுர அடி) |
|---|---|---|
| 1 | சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் (தகரம்,பிலெக்ஸ்,லுமினஸ்) அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தல் | 100•00 |
| 2 | ஒரு மாதத்திற்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான காலஎல்லைக்கு காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 30•00 |
| 3 | ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு குறைவாகக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 20·00 |
| 4 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான கால எல்லை | 40·00 |
| 5 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லை | 30•00 |
| 6 | வர்த்தக நிலையங்களுக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தக நாமத்தை உடைய வர்த்தக பெயர்பலகை தவிர்ந்த வேறு பெயர்ப்பலகை | 100:00 |
| 7 | டிஜிற்றல் பெயர்ப்பலகை | 150•00 |
| 8 | ஒளிபுகக்கூடிய விளம்பரம் | 150:00 |

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 10. | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள். வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது. காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள். மரக்கறி. முட்டை என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11. | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையங்கள் | உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| | | | 2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. |
| 12. | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள். வியாபார நிலையங்கள். அரச. தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாக தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | | | அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்படல் வேண்டும். |
| | | | பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. |
| 13. | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2023 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/புதுப்பித்துக்கொள்ளவும். கல்வித் தகைமை: Civil- NVQ Level 5 பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். |
| 14. | தரகர் முறை நீக்கல் | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம். 021 224 0017/ 021 224 4045**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C-5398)

> பையில் துவாரமிருந்தால் அதில் பணத்தை நிரப்பி பலனில்லை.
>
> – ஜார்ஜ் எலியட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்து மதம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் கூறிய கருத்து

வரலாற்றை அறியும்போதுதான் நம் முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிய முடியும்.

நம் முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறியும்போதுதான் நாம் இழந்தவை எவை என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

இழந்தவற்றை தெரிந்து கொண்டால் மட்டுமே அவற்றை மீளப் பெற்றுக்கொள்கின்ற உத்வேகம் உருவாகும் என்று தமிழகத்தின் பேச்சாளர் ஒருவர் கூறியதை நினைத்துப் பார்க்கின்றேன்.

ஆம், வரலாறுகள் எந்தவித மாற்றமுமின்றி பதிவு செய்யப்பட வேண்டும். அதுவே வரலாறு.

இதைவிடுத்து வரலாற்றைத் திரிபுபடுத்தி எழுதுவது வரலாற்றைச் சிதைக்கின்ற செயலாகும்.

இந்த சிதைப்பை இந்த நாட்டின் இடைக்கால ஆட்சியாளர்கள் செய்ததன் விளைவாக உண்மைக்கும் திரிபுக்கும் இடையில் மோதல் நடந்தாகிறது.

என்றைக்கு இந்த நாட்டில் உண்மையான வரலாறு வெளிப்படுகிறதோ அன்றுதான் இலங்கைக்கு விமோசனம் கிடைக்கும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

உண்மை. இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதில் எந்த ஐயமும் கிடையாது.

தவிர, இந்த நாடு சிவனை முழுமுதற் கடவுளாக வணங்குகின்ற மக்கள் வாழ்ந்த நாடு எனும்போது சைவம் இந்த நாட்டின் ஆதிச் சமயம் என்ற வரலாறு வெளிப்படுகிறது.

ஆம், இதன் காரணமாகவே திருமூலநாயனார் ஈழத்தைச் சிவபூமி எனப் போற்றினார்.

ஆக, இந்தியா இந்து சமயத்தின் நிலைகலனாக இருந்து ஞானபூமியாக விளங்க, இலங்கை சைவத்தின் மூலாதாரமாய் இருந்து சிவபூமியாக விளங்குகிறது.

இதுவே உண்மை. இந்த உண்மைக்கு எப்போது பங்கம் ஏற்பட்டதோ அன்று இந்த நாட்டுக்கு வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியது.

இந்த இடத்தில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இலங்கையில் இந்து மதத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பது தொடர்பில் அரசாங்கம் ஆராய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறிய மேற்போந்த கருத்து அவருடைய சொந்தக் கருத்தன்று.

மாறாக இலங்கை சுதந்திரமடைந்த கடந்த 74 ஆண்டு காலத்தில், இலங்கை பட்ட துன்பங்கள் துயரங்கள் மற்றும் இழப்புகளில் இருந்து கற்றுக் கொண்ட விடயம் என்பதை இந்த இடத்தில் கூறித்தானாக வேண்டும்.

ஆம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதுபோல இந்து மதத்தின் தனித்துவம் பேண நடவடிக்கை எடுக்கப்படுமாயின், தெய்வ குற்றம் நீங்கி பாவவிமோசனம் கிடைக்க வாய்ப்புண்டு.

## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையத்தால் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் கருவி நிறுவன தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் மருத்துவ சி.சிவன்சுதன் கலந்து கொள்ளவுள்ளார். (4-6)

## வேட்டைக்கு பயன்படுத்தும் பொருட்களுடன் ஒருவர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் நேற்று முன்தினம் மாங்குளம் பகுதியில் உள்ள கல்குவாரிப் பகுதியில் கண்காணிப்பு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மாங்குளம் கல்குவாரி பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில். உள்ளூர் துப்பாக்கியும் 100 கிராம் நிறை கொண்ட ஈயம் மற்றும் தீக்குச்சி மருந்து துப்பாக்கி ரவைகளும் மற்றும் வாள் ஒன்றும் மான் கொம்புகள் இரண்டுடன் சந்தேக நபர் ஒருவர் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

(4-6-315-316)

## வாசிப்பு மாதமும் பரிசில்தினமும்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சக்கரம் சமூக அபிவிருத்திக்கான கலைமன்றம் கடந்த ஐப்பசி மாதம் 29 ஆம் திகதி நடாத்திய வாசிப்பு மாதப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்லையா சீவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் நடேசு தயாளன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்க உள்ளார்.

இந் நிகழ்வில் செம்முகம் ஆற்றுகைக்குழு யா.விஷ்ணு நடிக்கும் நாவல் சட்டை தனியாள் ஆற்றுகையும், சண் நாடகக் குழுவினரின் பூ. கணேசராசவின் நெறியாள்கையில் காதலுக்கு மருந்து எனும் இரு நாடகங்கள் மேடையேற உள்ளன. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** பிரிட்டிஷ் கவுன்சில் - ரக்கா வீதி, இயற்கை விஞ்ஞான பீடம், விஞ்ஞான பீடம், தியாகி அறக்கொடை நிலையம், றியோ கிரீம்ஹவுஸ், அரசடி பழம் வீதி, கைலாச பிள்ளை யார் கோவில், நல்லூர் கோயில், நாவலர் வீதி, இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி, ரக்கா வீதி- [illegible] கோவில் வீதி சந்தி, இராமநாதன் வீதி, புகையிரத குறுக்கு சந்தி பந்திங் சென்டர் -கலைவாணி வீதி, கல்வியியல் கல்லூரி-கோப்பாய், கோண்டாவில் நீர் வழங்கல் சபை, கோப்பாய் இராணுவ முகாம், இராஜேஸ்வரி மண்டபம், பல்கலைக்கழக விடுதி, கலைவாணி திருநெல்வேலி, கோண் டாவில் கிழக்கு, கிருஷ் ணன் கோவிலடி, பொற்பதி, புகையிரத நிலைய வீதி சந்தி, இராஜவீதி-கோப்பாய், சம்பத் வங்கி, வாமாஸ் வீதி விளான், அரசடி சந்தி, சங்கானை, சங்கானை வைத்தியசாலை, சங்கானை சந்தை, நிச்சாமம், தொட்டிலடி, வல்லை வீதி சங்கானை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## திருமறைக் கலாமன்ற தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

கலைப்பணியில் 57 ஆண்டுகளை நிறைவு செய்து 58 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் திருமறைக் கலாமன்றத்தின் தினம் இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

காலை 7 மணிக்கு இல.17, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபியான இல்லத்தில் நன்றி வழிபாடு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மு.ப.10 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் மன்ற அலுவலகம் அருகில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி. சுகன்யா அரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வுகளுக்கு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாண பெட்டக நிழலுரு கலைக்கூட இயக்குநர் மா.அருள்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனங்கள், கலைஞர் கௌரவிப்பு என்பனவும் சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் "ஏகலைவன்" தென்மோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளது. (4-6)

### குற்றச்செயல்களை கட்டுப்படுத்த

## தென்மராட்சி பிரதேசத்தில் திடீர் சோதனை நடவடிக்கை

(கரணவாய்)

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள், வன்முறைகள் அதிகரித்துக் காணப்படும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அப் பகுதிகளுக்கான திடீர் கூட்டு நடவடிக்கைகளை உயர் அதிகாரிகள் நேற்று மேற்கொண்டுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட நாவற்குழி, புதியகுடியேற்றத் திட்டமே இவ்வாறு அடையாளம்காணப்பட்ட பகுதியாகும்.

இப் புதிய குடியேற்றத் திட்டத்திற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை தென்மராட்சி பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி நீதிமன்ற உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர், கிராம மட்ட அமைப்புக்கள் எனப் பலர் கூட்டிணைந்து திடீர் விஜயத்தினை மேற்கொண்டனர்.

இதன்போது ஒவ்வொரு வீடாகச் சென்று பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள், பெண்கள் தொடர்பில் ஆய்வு செய்ததுடன், போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையினையும் மேற்கொண்டனர். பொலிஸார் மற்றும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். இதன்போது மதுவரித் திணைக்களத்தினரால் 22 வயதுடைய இளைஞனின் உடைமையில் கஞ்சாப் பொதிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு உடன் கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்த முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். குறித்த குடியிருப்பு அமைந்துள்ள காணி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குரிய ஆதனம் என்பதால் தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை அறிந்து அவர்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதை மறுபரிசீலனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளை இனம் கண்டு பாடசாலைக்கு மீள அனுப்பும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் போதைப் பொருள் பாவனை, வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்பட்டது. (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயத்துக்கு அரசியலமைப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டும்

## சிவசேனை அமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம்

(வவுனியா)

சைவசமயத்துக்கு அரசியலமைப்பில் முன்னுரிமை கொடுக்குமாறு சிவ சேனையின் நீண்டகாலக் கோரிக்கையை வலியுறுத்தி சிவசேனை அமைப்பின் துணைத் தலைவர். தமிழ்திரு மாதவனால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றை ஆதி சமயமாக சைவசமயப் பின்னணியில் பார்க்க வேண்டும், ஆராய வேண்டும், மீள எழுத வேண்டும் என்ற தங்களின் முன்னோடிக் கருத்தை வரவேற்கிறோம். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்ந்து இருக்கும் சைவசமயமே இலங்கையின் சமயமாக இருந்தும் இக்கால அரசியல் அமைப்பில் 1972ஆம் ஆண்டு தொடக்கம் வரலாற்றுக்கு முரணாகப் புத்த சமயத்தை முன்னுரிமைச் சமயமாக எழுதி வைத்துள்ளீர்கள்.

இந்தத் தவறைத் திருத்த வேண்டும். அரசியலமைப்பில் சைவ சமயமும் முன்னுரிமைச் சமயமாக அமைய வேண்டும்.

சிவசேனையில் உள்ள நாம் இக்கருத்துக்களை கடந்த ஆறு ஆண்டுகளாகக் கூறி வருகிறோம்.

புதிய அரசியலமைப்பில் சைவ சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் வரிகளைச் சேர்க்குமாறு இலங்கையில் உள்ள சைவ சமயிகள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

வரலாற்றுக்கு முந்தைய காலந்தொட்டு இலங்கையில் தொடரும் சைவ சமயத்தைப் பேண, பாதுகாக்க, வளர்க்க அரசு கொள்கை வகுக்கவும் நிதி ஒதுக்கவும் செயலாக்கவும் முன்வருமாறு கேட்டுக் கொள்கிறோம் என குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-299)

# ஆண்டு நிறைவு விழா

(வவுனியா)

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 3 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

சங்கத்தின் தலைவர் மருத்துவர் ப.சத்தியநாதன் தலைமையில் காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி கோவிலில் இருந்து நாயன்மார்கள் மற்றும் இந்து மதத்திற்கு அரும்பங்காற்றியவர்களை சித்திரிக்கும் வகையிலான வேடங்கள் அணிந்த மாணவர்களுடன் ஊர்வலம் ஆரம்பித்து வவுனியா சுந்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினை சென்றடையும். இதனையடுத்து சங்க மண்டபத்தில் கலை நிகழ்வுகளும் உரைகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்விற்கு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (4-6-299)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

**சந்தை, இறைச்சிக் கடைக்கான 01.01.2023-31.12.2023 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2023**

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 05.12.2022 இல் இருந்து 15.12.2022 ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-16.12.2022 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-16.12.2022 காலை 10.30 மணிக்கு. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 22.10.2022 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

2023 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை விபரம்

| தொ.இல | குத்தகை விபரம் | 2023ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 213,101.50 | 2131.02 | 500.00 | - |
| 2 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 51,100.00 | 511.00 | 500.00 | 100.00 |
| 3 | நெல்லியடி மீன் சந்தை | 480,000.00 | 4800.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | - | | | |
| 4 | மண்டான் சந்தை | 47,249.00 | 472.49 | 500.00 | - |
| 5 | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 200,000.00 | 2000.00 | 500.00 | 100.00 |

தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
03.12.2022 (சி-5399)

# வவுனியாவில் மழையின்மையால் உழுந்து செய்கை பாதிப்பு



(நெளுக்குளம்)

வவுனியாவில் கடந்த 20 நாட்களாக மழை இன்மை யால் உழுந்து செய்கையாள ர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 5500 ஹெக்டேயருக்கும் அதிகமாக உழுந்து செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மழையின்மை விவசாயிகளை பெரிதும் பாதித்துள்ளது.

கடந்த காலங்களில் 4000 ரூபாவுக்கு உழவுப் பணம் கொடுத்து 400 முதல் 500 ரூபாவுக்கு விதை உழுந்து பெறக்கூடிய நிலை காணப்பட்ட போதிலும் தற்போது 15000 ரூபா உழவுப் பணமாகவும் 1100 முதல் 1200 வரை விதை உழுந்து கொள்வனவு செய்தே செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (4-6-299)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் ரூபாய் 100,000 நிதி அன்பளிப்பின் மூலம் மன்னக்குள்ம் மாதர்கிராம அபிவிருத்தி சங்கத்தினால் தமது பிரதேசத்தைச் சேர்ந்த மாங்குளம் மகா வித்தியாலயம், கனகராயன்குளம் மகா வித்தியாலயம் மற்றும் யோகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்று வரும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு தலா ரூபாய் 2,000 பெறுமதியான மழைக்கவசங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## பொதுக்கூட்டம்

(நெளுக்குளம்)

ஈழப்புரட்சி அமைப்பின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் தலைவர் துஸ்யந்தன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு 1 ஆம் ஒழுங்கை, மகாறம்பைக்குளம் வீதி, பூந்தோட்டம், வவுனியா எனும் முகவரியில் உள்ள தலைமை காரியாலயத்தில் ஆரம்பமாகவுள்ள குறித்த பொதுக்கூட்டத்தில் புதிய அங்கத்தவர்களை இணைத்தல் மற்றும் புதிய நிர்வாக தெரிவுகளும் இடம்பெறவுள்ளதுடன் கொள்கை பிரகடனமும் வெளியிடப்படவுள்ளது. (4-6-299)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 200 | 200 |
| தக்காளி | 200 | 250 | 300 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 150 | 200 | 160 |
| கோவா | 250 | 240 | 300 | 280 |
| கரட் | 300 | 450 | 500 | 500 |
| பூசணி | 100 | 150 | 150 | 140 |
| புடோல் | 250 | 270 | 200 | 250 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 650 | 600 | 650 | 800 |
| பெரிய வெங்காயம் | 300 | 210 | 200 | 240 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 120 | 100 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 350 | 360 | 480 | 500 |
| பீற்றூட் | 400 | 350 | 500 | 450 |
| கறிமிளகாய் | 600 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 750 | 800 | 600 |
| போஞ்சி | 200 | 300 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 180 | 160 | 200 | 160 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 65 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 300 | 300 | 280 |
| வெங்காயப்பூ | -- | 400 | 400 | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 40 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு உற்பத்தி...

டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கோப்பாய் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. (ம-7,104)

## 21 வயது...

21 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவானின் அனுமதியுடன் சடலம் மீட்கப்பட்டு, உடல் கூற்று பரிசோதனைகளின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,316)

## மின்கட்டணத்தை...

அனுமதி இல்லாவிட்டாலும் கூட மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது சாத்தியம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை மின்சார சபை, மேற்படி விலையேற்றத்திற்கு ஏற்கெனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், மின் கட்டண அதிகரிப்பு தொடர்பான கோரிக்கையை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என தெரிவித்துள்ளது.

இதன்படி, அதிகரிக்கப்படவுள்ள மின் கட்டணங்கள் தற்போது கணக்கிடப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## பல்கலைக்கழக...

இதன்படி, 2021 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் www.ugc.ac.lk இணையத்தளத்தின் ஊடாக இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.(ம-7)

## தமிழ் மக்களின்...

துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் தற்போது காணப்படும் நிலை தொடர்ந்தால் தமிழ் மக்களின் அடையாளம், சுயமரியாதை ஏன் கௌரவத்தை கூட பேணமுடியாத நிலையேற்படும் என இரா.சம்பந்தன் கவலை வெளியிட்டுள்ளார்.

அரசியல்தீர்வு தொடர்பில் இலங்கை அரசாங்கம் தீர்வுகளை முன்வைக்கவில்லை, ஒரு பக்கத்தில் வடக்கிலும் கிழக்கிலும் மீள்குடியேற்றம் காரணமாக சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது அதேவேளை வன்முறைகள் மற்றும் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக தமிழ் மக்கள் நாட்டிலிருந்து தப்பி வெளியேறுகின்றனர்.

இந்த நிலை தொடர்ந்தால் தமிழ் மக்கள் அடையாளம், சுயமரியாதை ஏன் கௌரவத்தைக்கூட பேண முடியாத நிலையேற்படும்.

சர்வதேச சமூகம் இந்த நிலையேற்படுவதற்கு அனுமதிக்கக்கூடாது. உலகிற்கு இது பிழையான முன்னுதாரணமாக மாறும்.

பிராந்தியத்திலும் நாட்டிலும் சமாதானத்தை சர்வதேச சமூகம் விரும்பினால் அவர்கள் இந்த பிரச்சினைக்கு தீர்வை காணவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## தேர்தல் ஆணை...

உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

சட்டத்தின்படி, சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு, எதிர்வரும் 2023 மார்ச் 20ஆம் திகதிக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும்.

இதற்கான அனைத்து உரிமைகளும் அந்த ஆணைக்குழுவுக்கு உள்ளது.

எனினும் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சிஹேவா, சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளை கோரியிருக்கிறார்.

இது, ஏற்புடையதல்ல. தேர்தலை நடத்துவதற்குரிய அனைத்து அதிகாரங்கள் இருந்தும்கூட, ஆணையாளரின் செயற்பாடு, சந்தேகத்துக்குரியதாக அமைந்துள்ளது.

எனவே அவரை சுயாதீனமாக செயற்படும் ஒரு ஆணையாளராக கருத முடியாது என்றும் அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அடிக்கடி பிற்போடப்படுகின்ற தேர்தல், வந்து பதில்களைக் கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பிலும் பதிலை வழங்கவேண்டும் என்று அநுரகுமார கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

## அரசியல் சீர்...

வித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறுவனத்தின் புரிதலை மேம்படுத்துவதற்காக இந்த சந்திப்பு இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறுவனம் எவ்வாறு சாத்தியமான முன்னோக்கி செல்லும் பாதையை ஆதரிக்க முடியும் என இதன்போது இருவரும் கலந்துரையாடினர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செப்ரெம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்த சமந்தா பவர், இலங்கையின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களின் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்தல் உட்பட, இலங்கையின் சிக்கலான நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உதவுவதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார் என்றும் ஜெசிகா ஜென்னிங்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் சமாதானம் மற்றும் செழிப்பைப் பாதுகாக்க உதவுவதற்கான, இலங்கையுடனான தனது நீண்டகால கூட்டாண்மையை மேலும் வளர்ப்பதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறுவனம் உறுதியாக உள்ளது என்றும் ஜெசிகா ஜென்னிங்ஸ் தெரிவித்துள்ளார். (ம-7)

## இலங்...

களிப்பை சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து பிரிட்டன் தொடர்ந்தும் கரிசனையுடனும்கவனத்துடனும்இருக்கும் என தெரிவித்துள்ள அவர், இலங்கை மனிதாபிமான விவகாரங்களை எதிர்கொள்வதற்கு பிரிட்டன் உதவும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## கிளிநொச்சியில்...

அதிகரித்து வருகின்றன.

நேற்றைய தினம் கிளிநொச்சி நகருக்கு அண்மையாக அரச ஓய்வூதியர் ஒருவரைக் கடுமையாகத் தாக்கி அவரிடம் இருந்து பணம் பறிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

## வங்கிக் கணக்கு...

தாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் இரண்டு உக்ரேனியர்கள் மற்றும் மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட எட்டு சந்தேகநபர்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சிஐடி) கணினி குற்றப்பிரிவு கைது செய்துள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் கடந்த நவம்பர் 24ஆம் திகதி குறித்த வணிகரின் வங்கிக் கணக்கில் இருந்து அனுமதியற்ற முறையில் 13.7 மில்லியன் ரூபாய் பணத்தை மற்றுமொரு கணக்கிற்கு மாற்றியுள்ளனர்.

இதேவேளை நாட்டில் கணினி குற்றங்கள் வெகுவாக அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ள பொலிஸார், அவதானமாக வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1412
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 4 7 1 6 9 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.02
சீட்டிழுப்பு இலக்கம் - 987
A 01 08 24 72
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.02
சீட்டிழுப்பு இலக்கம் 3199
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
A 09 20 46 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1305
M 09 48 50 70 79

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.12.02
சீட்டிழுப்பு இலக்கம் 266
கடகம் 14 15 35 59 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/02
சீட்டிழுப்பு இலக்கம் 4957
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 7 8 1 3 7 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1932 — நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.12.02 — தினம் வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,485,560/-
X 13 19 41 42
6704 686

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.02
சீட்டிழுப்பு இல : 4093
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,134,660/-
வெற்றி இலக்கங்கள் 03 17 45 66 J

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 256
சீட்டிழுப்பு திகதி 2022.12.02 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 38 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,384,840/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,819,376.60
திகதி 2022-12-02
வெற்றி வாரம் 3644
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 22 29 46 58
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,920,940/-

லக்ன
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 38 02 40 53 68
சீட்டிழுப்பு வாரம் 1108
திகதி 2022.12.02 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 282,381,899.80
தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1758
சீட்டிழுப்பு திகதி : 2022.12.02
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,922,920/-
வெற்றி இலக்கங்கள் 07 32 36 70 T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 182 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.


**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

**ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்**









**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(13643)

தொடர்பு

**ஜெயம்**

**077 814 7389, 077 986 5457**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.